# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | அ.சா.5 |
| Name | : | செந்தில்ராஜா (சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்) |
| Father's Name | : | தேசிங்கராஜா |
| Address | : | பெரம்பலூர் காவல் நிலையம் |
| Age | : | 46/2025 |

**<u>தேதி : 13.08.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.11.2024ம் தேதி பெரம்பலூர் காவல் நிலைய அலுவலலில் இருந்தபோது இந்து சமய அறநிலையதுறை செயல் அலுவலர் ஹேமாவதி கொடுத்த புகாரின் பேரில் நிலையம் மனு எண்.1181/2024, 30.10.2024ம் தேதி கொடுத்த மனுவின் பேரில் பெரம்பலூர் காவல் நிலைய குற்ற எண்.825/2024 சட்டப்பிரிவுகள் 191 (2), 296(பி), 132 BNS 02.11.2024ம் தேதி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். வாதியின் புகாருடன் முதல் தகவல் அறிக்கையை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 என்னிடம் நேரடியாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின்படி சம்பவம் நடந்த நாள் மற்றும் நேரம் 28.10.2024 பிற்பகல் 4.00 மணி என்றால் சரிதான். எனக்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரம் 02.11.2024 பிற்பகல் 4.00 மணி என குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.1 தனது புகாரில் என்றைக்கு புகார் கொடுத்தார் என்று தேதி குறிப்பிடவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவ நேரம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் 02.11.2024 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகா2ரினை நீதிமன்றத்திற்கு 31.12.2024 அன்றுதான் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். புகாரினையும், முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு 59 நாட்கள் காலதாமதமாக அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து முடித்தபோது மாலை 5.00 மணி இருக்கும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடனேயே ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். நான் சொன்ன நேரத்தில், சொன்னமாதிரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், நான் அவ்வாறு பதிவு செய்திருந்தால் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.